[2009 ஜூன் 23

20—

பால் பதப்படுத்தும் நிலையம்

***62552—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் ஒன்றியம், மறவமங்கலம் கிராமத்தில் பால் பதப்படுத்தும் நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் ஒன்றியம், மறவமங்கலம் கிராமத்தில் பால் பதப்படுத்தும் நிலையம் தற்போது அமைக்க வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

முற்பகல் 10—40

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறவமங்கலம் பகுதியில் கால்நடைகள் அதிகமாக இருக்கிற காரணத்தினாலும், அங்கு சுற்று வட்டாரத்தில் பால் உற்பத்தி அதிகம் செய்யப்படுகிற காரணத்தாலும், அந்தப் பகுதியிலே பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று அமைப்பது அவசியம் ஆகிறது. மேலும், அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால், ஆவின்மூலமாக இயங்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்கள் தன்னுடைய உற்பத்தியை நிறுத்தக்கூடிய ஒரு சூழல் நிலவுகிற காரணத்தால், அந்தப் பகுதியிலே பால் உற்பத்தியை அதிகப்படுத்தி, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாய மக்களுக்கு நன்மை பயக்கும்விதமாக மறவமங்கலத்தில் ஒரு குளிரூட்டும் நிலையத்தை அமைத்துத் தரும்படி தங்களின்மூலமாக அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

2009 ஜூன் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் ஒன்றியத்தில் மறவமங்கலம் கிராமத்தில் பெருமளவுக்கு அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின்மூலமாக இன்றைக்கு 70 லிட்டர் பால்தான் கொள்முதல் ஆகிக்கொண்டிருக்கிறது. அதைச் சுற்றியுள்ள 23 கூட்டுறவுச் சங்கங்கள்மூலமாக 3,200 லிட்டரிலிருந்து 3,700 லிட்டர் வரை இன்றைக்குப் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. 5,000 லிட்டருக்குமேல் அங்கே பால் உற்பத்தி வருகின்றபட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற அந்த மறவமங்கலம் கிராமத்தில் புதிதாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மறவமங்கலம் மற்றும் அந்த சுற்று வட்டாரப் பகுதிகளில் கிட்டத்தட்ட 6,000 லிட்டர் பால் என்ற அளவிலே வந்துகொண்டிருந்தது. அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால்தான், இப்போது அந்தச் சங்கங்கள் எல்லாம் பால் உற்பத்தியை நிறுத்திய ஒரு சூழல் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் முதலிலேயே குறிப்பிட்டேன். எனவே, அந்தப் பகுதி விவசாயிகளுடைய நன்மையைக் கருதி குளிரூட்டும் நிலையம் போன்ற வசதிகளைச் செய்து கொடுத்தால், பால் உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக இருக்கும். இன்னும் சிவகங்கை மாவட்டத்தில் அந்தப் பகுதியிலே தனியார் பால் நிறுவனங்கள் தற்போது கூடுதலாகப் பால் உற்பத்தியைச் செய்து கொண்டிருக்கின்றன. அவர்கள் பல வசதிகளைச் செய்து தருவதால், ஆவின் கூட்டுறவுச் சங்கங்கள் நலிவடையக்கூடிய சூழல் இருக்கிறது என்பதைச் சொல்லி, சிவகங்கை மாவட்டத்தைப் பொறுத்தவரை ஆண்டுக்கு சுமார் 37,000 லிட்டர் பால் நாள்தோறும் உற்பத்தி ஆகிறது. அதிலே, சிவகங்கைப் பகுதியில் மட்டும் 20,000 லிட்டர் பால் கிடைப்பதாகக் கூறுகிறார்கள். இதைப் பயன்படுத்தி இன்னும் தனியார் நிறுவனங்களின்மூலமாக கூடுதல் பால் உற்பத்தி நடைபெறுகிற சூழலையெல்லாம் பயன்படுத்தி, சிவகங்கைப் பகுதியிலே பால் பொருட்களைப் பயன்படுத்தித் தயாரிக்கிற உப தொழிற்சாலைகளைத் துவக்குவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற அந்தப் பகுதியினை ஆய்வு செய்து, தேவையான அடிப்படை வசதிகளையும் செய்து, பால் உற்பத்தியைப் பெருக்கி, மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்தப் பகுதியிலே ஒரு bulk milk cooler—குளிரூட்டும் நிலையம் ஒன்று அமைக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல்கள் 4 முதல் 6 வரை)@

பட்டியல் 4

1—

வணிக வளாகம்

வினா எண் 63615—திருமதி இளமதி சுப்பிரமணியன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வலங்கைமான் தொகுதி, அம்மாபேட்டை ஊராட்சியில் மகளிர் சுய உதவிக் குழுவினர் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்க வணிக வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

மகளிர் சுய உதவிக் குழுவினர் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்க தஞ்சாவூர் மாவட்டத்தில், மாவட்ட அளவில் பூமாலை வணிக வளாகம் கட்டப்பட்டுள்ளது. கிராமப் பகுதியில் மகளிர் சுய உதவிக் குழுவினரால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை இவ்வணிக வளாகம்மூலம் விற்பனை செய்ய முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.